GOVERNMENT OF TAMILNADU
ABSTRACT.

Education-Scholarships Award of scholarships to talented boys and girls from rural areas-Orders issued.

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

EDUCATION (E2) DEPARTMENT.

G.O.Ms.No.960.

Dated: 11.10.91
Purattasi 25, Thiruvalluvar Andu 2022.

Read:

1. From the Director of School Education D.O.Letter No. 112644/J3/91, dated 1.8.91 and 13.8-1991.
2. From the Director of Elementary Education D.O.Letter No.35691/B1/91 dated 2.8.91.

-oOo-

ORDER:

In the Budget presented before the Legislature for the year 1991-92, the Government have announced a new Talent Search scheme for Rural children. In pursuance of this, the Government have certained proposals from the Director of School Education and the Director of Elementary Education regarding selection of rural boys and girls to get scholarship so that the best talented and most intelligent boys and girls in the rural areas can get direct benefit of cash awards from the Government.

2. The Government have considered the proposals and the need to encourage the talented students from rural areas and have decided that a scheme should be launched to select the talented students from rural areas from an early age to get scholarships to presecute their studies in High and Higher Secondary Schools.

3. Accordingly the Government approve a scheme for award of scholarships to talented boys and girls from rural areas in Tamilnadu for implementation from the academic year 1991-92 and the scheme will be named as Tamilnadu Rural Students' Talent Search Scheme (TRUSTE).

4. The scheme shall be implemented as per the following guidelines:-

i) The Scholarship scheme for the talented rural students shall be for the students studying in the schools located in rural areas only. Schools in rural areas would mean all the Government Recognised schools other than the schools located in Municipal Corporations and Municipalities. The Schools located in village Panchayats. Town Panchayats and Townships shall come within the ambit of this scheme;

ii) At the end of VIIIth standard a test will be held for Boys/Girls.

iii) The first 50 boys and 50 girls from each district shall be selected for the scholarship on the basis of a Talent search examination irrespective of Caste and religion.

iv) The Department of Government Examinations shall conduct the Talent search Examination. A suit ble pattern and teachnique of evalution will be adopted by that Department in consultation with Director of school Education and Director of Elementary Education. The merit list showing the rank, district-wise shall be furnished by Director of Government Examinations to the Director of school Education.

v) The selected students shall be awarded an annual scholarship amount of Rs.1000/- (Rupees one thousand only) every year till the student completes studies in standard XII, at the end of each academic year, provided that he/she continues to get 50% of marks at the end of each academic year.

vi) The student selected under the scheme if detained or discontinued his/her studies will not be eligible for scholarship amount subsequently.

vii) The students whose parent's annual income does not exceed Rs.12,000/- will be eligible for competing in the Talent Reasearch Examination.

viii) The Director of school education will implement the scheme.

5. The Government sanction one post of assistant for the Directorate of School Education and one post of Assistant for the Directorate of Government Examinations for the implementation of the scheme and for the conduct of Examinations. The posts will carry the scale of pay of Rs.1200-2040. The posts shall be for a period of one year from the date of filling of the posts. The incumbents of the posts shall be eligible for Dearness and other allowances as admissible from time to time.

6. The expenditure on the scheme shall be debited to a new sub-head of account to be opened under "2202-02 Secondary Education-107. Scholarships-II. State plan.

7. The expenditure sanctioned is on a "New Service" and the approval of the Legilature will be obtained in due course. Pending approval by the legilature, the expenditure will be initially met by an advance from the contingency Fund, Orders regarding which will be issued separatel" from the Finance (SOI) Department.

The Director of School Education shood apply to the Government in the Finance (SOI) Department in prescribed proforma for the sanction of the advance from the contingency Fund with copy of this order.

8. This order issues with the concurrence of the Finance Department vide its U.O.No.4479/FM/P/91 dated 6.8.91.

( BY ORDER OF THE GOVERNOR)

J.R.RAMANATHAN,
Secretary to Government.

//true copy//

Sd/- x x x x
Director of Government Examinations,
Madras-6.

//true copy//

Chief Educational Officer,
Madurai-2.

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை - 600 006
ந.க. எண்.044202 / எம்1 / 08 நாள்: 30.12.2008

---

பள்ளிக் கல்வி - ஊரகப் பகுதிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு வழங்கப்படும் "தமிழ்நாடு கிராமப்புற மாணவர்கள் திறனாய்வுத் தேர்வு" படிப்பு உதவித் தொகை பெறுவதற்கான பெற்றோர் ஆண்டு வருமான வரம்பு - ரூ.12,000/- லிருந்து ரூ.1,00,000/- ஆக உயர்த்தி ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வித் (இ2) துறை

அரசு ஆணை (நிலை) எண்.256

நாள்: 22.12.2008
திருவள்ளுவராண்டு 2039
மார்கழி 7
படிக்கப்பட்டவை

1. அரசாணை (நிலை) எண்.960, கல்வித்துறை நாள்.11.10.1991
2. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித எண்.044202 / எம்4 / 08 நாள்.20.08.2008.

---

ஆணை

அரசாணை (நிலை) எண்.960, கல்வித்துறை நாள்.11.10.1991ன் படி ஊரகப் பகுதிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களில் அதிக மதிப்பெண் எடுத்து தேர்ச்சி பெற்றவர்களுக்கு அரசுத் தேர்வு இயக்குநரால் "தமிழ்நாடு கிராமப்புற மாணவர்கள் திறனாய்வுத் தேர்வு" நடத்தப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் 50 மாணவர்கள் மற்றும் 50 மாணவிகள் வீதம் தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒவ்வொருவருக்கும் உதவித் தொகை ரூ.1,000/- வீதம் நான்கு ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது எனவும் மேற்காண் அரசாணையில் குறிப்பிட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி மேற்படி திறனாய்வுத் தேர்வில் கலந்து கொள்ள மாணவரின் பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு ரூ.12,000/- க்கு மிகாமல் இருக்க வேண்டும் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது எனவும் தற்போது பெற்றோர்களின் வாழ்வாதாரம் உயர்ந்துள்ள நிலையில் ஆண்டு வருமானம் ரூ.12,000/-தான் என நிர்ணயம் செய்து வருவாய்த் துறையிடமிருந்து வருமானச் சான்று பெற இயலாத நிலை உள்ளது எனவும், மேலும் இதுபோன்று மத்திய அரசு திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் 'நேஷனல் மீன்ஸ் கம் மெரிட் ஸ்காலர்ஷிப்' திட்டத்திற்கான வருமான உச்சவரம்பு ரூ.1.50 லட்சம் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையிலும், அதே போன்று ஆதி திராவிடர் / பழங்குடியினர் ஸ்காலர்ஷிப் திட்டத்திற்கு வருமான உச்ச வரம்பு உயர்த்தப்பட்டுள்ள நிலையிலும் பெருவாரியான மாணவர்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டத்திற்கும் ஆண்டு வருமான உச்ச வரம்பினை கணிசமான அளவு உயர்த்தி உரிய ஆணை வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் கோரியுள்ளார்.

2. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையால் அரசாணை (நிலை) எண்77, நாள்.11.07.2008ல் கல்வி உதவித் தொகை திட்டத்தின்கீழ் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர், மற்றும் சீர்மரபினர் மாணவ / மாணவியர்க்கு உதவித் தொகை பெறுவதற்கான பெற்றோரின் ஆண்டு வருமான உச்ச வரம்பு 2008-09ம் ஆண்டு முதல் 1,00,000/- ஆக உயர்த்தி ஆணைகள் வெளியிடப்பட்டன.

3. தமிழ்நாடு கிராமப்புற மாணவர்கள் திறனாய்வுத் தேர்வானது திறமை உள்ள கிராமப்புற மாணவர்களை ஊக்குவிக்கும்பொருட்டு நடத்தப்படும் தேர்வு என்பதாலும், இத்தேர்வில் கலந்து கொள்ளத் தேவையான பெற்றோரின் ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.12,000/- என 1991ம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்டதாலும், தற்போது பெற்றோருக்கான ஆண்டு வருமானம் ரூ.12,000/- என நிர்ணயம் செய்து வருமானச் சான்று வழங்க இயலாது என வருவாய்துறை கூறுவதாக மாணவர்களின் பெற்றோர்கள் தெரிவித்துள்ளதாக பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளதாலும், மேலும் கல்வி உதவித் தொகை திட்டத்தின்கீழ்சலுகைகள் பெற பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு தற்போது ரூ.1,00,000/- என பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர், மற்றும் சீர்மரபினர் நலத்துறையால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையிலும் பள்ளிக் கல்வி இயக்குநரின் பரிந்துரையினை ஏற்று தமிழ்நாடு கிராமப்புற மாணவர்கள் திறனாய்வுத் தேர்வில் கலந்து கொள்ள பெற்றோரின் ஆண்டு வருமான உச்ச வரம்பினை ரூ.12,000/- லிருந்து ரூ.1,00,000/- ஆக உயர்த்தி அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வரசாணை நிதித்துறையின் அசா.கு.எண்.59506 / கல்வி II / 2008 நாள்.17.10.2008ல் பெறப்பட்டுள்ள இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம. குற்றாலிங்கம்
அரசு முதன்மைச் செயலாளர்.

/ உண்மை நகல் /

நகல் : தக்க நடவடிக்கைக்காக அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு அறிவிக்கும் பொருட்டு இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

பள்ளிக் கல்வி இயக்குநருக்காக

பெறுநர்
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.